RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1923

# பாரதியாரின் கண்ணன் பாடல்கள் வழி வெளிப்படும் அறங்கள்

ம. மகாலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, (திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தெள்ளார்-604406, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Bharathiyar's Kannan Songs

M. Mahalakshmi [a, *]

[a] Department of Tamil, King Nandhivarman Arts and Sciience College, (Affiliated to Thiruvalluvar Universit), Thellar-604406, Tamil Nadu, India

* Corresponding Author: drmmahalakshmi16@gmail.com

Received: 31.08.2022
Revised: 03-10-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Mahakavi Bharathiyar's songs marks the turning point in the world of Tamil literature. Although there are many innovations in his works, he has never left the old and ancient tradition behind. He puts forward his thoughts, needs, expectations and prayers through devotional songs about Lord Ganesha, Muruga, Lakshmi, Saraswati, Kali, Muthumari, Govindan, Shakti, Omshakti, Parashakti and Kannan. Among the poems written by Bharathiyar, the devotional songs, the songs about Kannan deserve much attention. He was so fond of Kannan that he kept his name as his pseudonym. This article examines the manner in his poems by seeing Kannan not only as a male form but also as a female form, it expresses the virtues which Bharathiyar intended to tell people through Kannan songs and how Bharathiyar accepted Kannan as a friend, father, servant, king, disciple, teacher, and mother.

**Keywords:** Virtue, Mahakavi, Bharatiyar, Kannan, Sevakan, Mother, King, Kannamma, Beloved

## முன்னுரை

தமிழரின் வாழ்வியலில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்கள் முதன்மையானவை. இவற்றுள் அறத்தின்வழிப் பெறும் பொருளும் இன்பமுமே சிறந்ததும் நிலைக்கக்கூடியதும் என்பதால் அறமே முதன்மையானதாக விளங்குகின்றது. சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள்வரை தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் மக்களுக்கு அறங்களை வலியுறுத்திய வண்ணம் அமைந்துள்ளன. மக்களை நெறிப்படுத்துவதைக் காலந்தோறும் இலக்கியங்கள் செய்து வந்தே உள்ளன. அவ்வாறு பாரதியார் கண்ணன்பாடல்கள் மூலம் மக்களுக்கு எவ்விதமான அறங்களை உரைக்கின்றார் என்பதையும் அவரின் அறக்கோட்பாட்டையும் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## அறம் - சொற்பொருள்

அறம் என்ற சொல்லுக்கு அகராதிகள் பல்வேறு வகையில் பலவாறு பொருள் கூறுகின்றன. அறம் என்ற சொல்லுக்குச் சுகம், இதம் என்று பொருள் கூறுகிறது தமிழ் அகராதி.

அறம் என்றால் கையறம், கருமம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று என்றும் பெரியோர் இயல்பினொன்று என்றும் பொருள் கூறுகிறது நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி (Kathiraivellai, 2003).

அறம் என்றால் இல்லறம், துறவறம் என இரு வகை. இல்லறம், கொடுத்தலும் மளித்தலும் கோடலும், இன்மையும், ஒழுக்கம், புணர்தல், புணர்ந்தோர்ப் பேணல் மற்றையவுமாம். துறவறமாவது துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும், அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும், பிறவுமாம் என வீரசோழியம் கூறுவதை எடுத்துக்காட்டுகிறது தமிழ்க் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணி (Singaravelu Mudaliar, 2004).

மேலும் அறம் 32 எனப் பட்டியலையும் இட்டுச் செல்வதையும் அபிதான சிந்தாமணியில் காணலாம். மேற்கண்ட அறம் குறித்த வரையறைகளின் வழி ஒரு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகளின் தொகுப்பை அறம் என்று வரையறை செய்யலாம்.

## காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் அறம்

சங்கக் காலம் முதல் தற்காலம் வரை அறத்தின் மேன்மையை முக்கியத்துவத்தைத் தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்திய வண்ணம் உள்ளன. கடையெழு வள்ளல்களான பாரி முதலானோர் ஒருவரை ஒருவர் விஞ்சம் அளவுக்குக் கொடைத்தன்மை மிக்கிருந்ததை அறிகின்றோம். கொடையும் தயையும் பிறவிக் குணம் என்று ஔவையாரும் பதிவு செய்துள்ளார். புறநானூற்றில் பொன்முடியார் "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே." என்ற பாடலில் அறங்களைப் பட்டியலிடுகிறார் (Parimelagar, 2010).

மனத்துக்கண் மாசின்றி இருப்பதே அறம் (திருக்குறள், குறள் எண்.34) என்கிறது திருக்குறள் (Balasubramanian, 2010). அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்கிறது சிலப்பதிகாரம். பசிப்பிணி போக்குவதே சிறந்த அறம் என்கிறது மணிமேகலை. இளையான்குடி மாறன் நாயனாரின் அறத்தைப் பெரியபுராணம் காட்டுகின்றது.

பின்னாளில் கல்வி அளிப்பதே சிறந்த அறம் என்று புறப்பட்டார்கள் கிறிஸ்தவர்கள். அன்ன சத்திரம் வைத்தலைக் காட்டிலும் ஏழைக்கு எழுத்தறிவைக்கொடுப்பதே சிறந்த அறமாகக் கண்டார் மகாகவி பாரதி. முற்கால மற்றும் பிற்கால நீதி இலக்கியங்கள் அறம் பாடுதலையே நோக்கமாகக் கொண்டு பல்வேறு வகையான அறங்களைப் போதித்துச் செல்வதைப் பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களிலும் ஆத்திசூடி முதலான பின்னாளைய அறநூல்களிலும் காணலாம். இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் மனிதனின் வாழ்வை நெறிப்படுத்த அறங்களை வலியுறுத்திச் சென்றதையும் தற்போதுவரை அப்பணி தொடர்வதையும் காண முடிகின்றது.

## மகாகவி பாரதியார் படைப்புகளில் அறம்

"மகாகவி பாரதி குறித்து பாரதிதாசன் கூறும்போது,

நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா

காடு கமழும் கற்பூரச் சொற்கோ

கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்

திறம் பாட வந்த மறவன் புதிய

அறம் பாட வந்த அறிஞன்"

என்றெல்லாம் புகழ்ந்து கூறுகின்றார். இவை வெறும் புகழ்ச்சிக்காகக் கூறப்பட்ட வரிகள் அல்ல. பாரதியின் ஆளுமைத்திறம் என்பது அவரின் தேசிய ஒற்றுமை, பெண்ணுரிமை, மொழிப்பற்று, மானுடப் பற்று, சுதந்திரத் தாகம், சமத்துவம், நகைச்சுவை, உணர்ச்சி, கண்டனம், காதல், தத்துவம் என்று பல்வேறு புதுமைகளின் தொடக்கமாக இருப்பதிலிருந்தும் தீர்க்க தரிசனப் பார்வை கொண்டவர் பாரதி என்பதிலிருந்தும் வெளிப்படும் (Padmadevan Kavignar, 2020).

மகாகவி பாரதியார் தொட்டுச் செல்லாத இடமே இல்லை. பெண்கள் முன்னேற வேண்டும், ஆணும் பெண்ணும் சமம் என்ற சமத்துவச் சிந்தனை, பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் மொழிபெயர்க்கப்படல் வேண்டும் என்ற பரந்த சிந்தனை, காசியில் ஒருவர் பேசினால் காஞ்சியில் கேட்பதற்குக் கருவிகள் செய்ய வேண்டும் என்ற அறிவியல் சிந்தனை, தன் பூணூலைக் கனகலிங்கம் என்ற ஆதிதிராடருக்கு அளித்த முற்போக்குச் சிந்தனை, நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்ற தன்னூக்கச் சிந்தனை, பொதுவுடைமைச் சிந்தனை என்று பல்வேறு புதுப்புதுச் சிந்தனைகளை அறத்தின் வழியே உணர்த்திய உலககவியாக, வரகவியாக பாரதியார் விளங்குகின்றார்.

## பாரதியாரும் பக்திப் பாடல்களும்

மகாகவி பாரதியார் தேசபக்தி, தெய்வ பக்தி என்று இரு விதமான பக்தி கொண்டிருந்தார். இவரின் தேசபக்திப் பாடல்களைக் காட்டிலும் தெய்வ பக்திப் பாடல்களே மிகுதி. விநாயகர், சரஸ்வதி, லஷ்மி, ஸ்ரீதேவி, முருகன், கண்ணன், கோவிந்தன், காளி, முத்துமாரி, சக்தி, அல்லா, யேசு கிறிஸ்து என்று அனைத்து தெய்வங்களளையும் பாடியுள்ளார் பாரதி. இவற்றுள் இந்து தெய்வங்களையே மிகுதியாகப் பாடியுள்ளார்.

“தேசியப் பாடல்களைவிட தெய்வீகப் பாடல்களை மிகுதியும் பாடிச் சென்றுள்ளார். ஆன்மீகத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாடே இதற்குக் காரணம் எனலாம். கடவுளர்களிடம் வேறுபாடு காணாமல் பல்வேறு சமயத் தெய்வங்களையும் ஒன்றாகவே வைத்துப் பாடிச் சென்றுள்ளார். ஆனால் பக்தியின் பெயரால் மக்களை ஏமாற்றும் சாத்திரச் சடங்குகள், கட்டுக்கதைகள் முதலானவற்றை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த அறியாமை இருளில் இருந்து மக்களை விடுவிக்கப் பாரதியார் பல்வேறு கருத்துக்களைப் பாடல்வழிக் கொடுத்துச் சென்றுள்ளார் என்று சொன்னால் அது மிகையாகாது” (Pannirugaivadivelan, 2007).

பக்தியினால் பல நன்மைகள் ஏற்படும் என்பதை பக்தி என்ற பாடலில் பட்டியல் இட்டுச் செல்கிறார் பாரதியார்.

“பக்தியினாலே - தெய்வ பக்தியினாலே

பக்தியினாலே - இந்தப்

பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ

சித்தந் தெளியும் இங்கு

செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்

வித்தைகள் சேரும் நல்ல

வீர ருறவு கிடைக்கும் மனத்திடைத்

தத்துவ முண்டாகும் நெஞ்சிற்

சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும்”

இவ்வாறு பக்தியினால் ஆசை போகும், அச்சம் போகும், உண்மை நிலைக்கும், சோர்வு போகும், சுகம் நிலைக்கும், செல்வங்களும் இன்பமும் வந்து சேரும், கல்வி வளரும், அறிவு மேன்மையுறும், வீம்புகள் போகும், சந்ததி வாழும் போன்ற பல நன்மைகள் ஏற்படும், அறம் வளரும் என்று பாரதி கூறுவதைக் காண முடிகின்றது (Pannirugaivadivelan, 2007).

## பாரதியாரும் கண்ணனும்

பாரதியார் தெய்வங்களுள் இந்து தெய்வங்கள்மீது அதீத பக்தி கொண்டவராக இருந்திருப்பதை அவரின் படைப்புகள்வழி அறியலாம். ஆனால் இந்து தெய்வங்களுள் கண்ணன் மீது அவர் அதிகமாகவே பற்று கொண்டிருப்பதைக் கண்ணன் பாட்டு நமக்குக் காட்டுகின்றது.

கவிஞர்கள் புனைபெயர் கொண்டு தம் படைப்புகளைப் படைப்பதுண்டு. அவ்வாறே பாரதியாரும் பல்வேறு புனைபெயர்களில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், சுயசரிதை, வசனகவிதை, கடிதங்களைப் படைத்துள்ளார். இளசை சுப்பிரமணியன், சாவித்திரி, சி.சு.பாரதி, வேதாந்தி, ஷெல்லிதாசன், காளிதாசன், பிஞ்சுக் காளிதாசன், சக்திதாசன், காசி, சரஸ்வதி, கிருஷ்ணன், நித்திய தீரர், உத்தமத் தேசாபிமானி, ரிஷிகுமாரன் போன்ற புனைபெயர்களில் தம் படைப்புகளை பாரதியார் வெளியிட்டுள்ளார். இவற்றில் கிருஷ்ணன் என்ற புனைபெயரிலும் தம் படைப்பை வெளியிட்டுள்ளதைக் காணும்போது கிருஷ்ணன் மீது அவர் கொண்ட பற்றை விளங்கிக்கொள்ள முடிகிறது.

கண்ணனுக்காகப் பல பாடல்களை அவர் பாடியுள்ளார். கண்ணன் என் தோழன், கண்ணன் என் தாய், கண்ணன் என் தந்தை, கண்ணன் என் சேவகன், கண்ணன் என் அரசன், கண்ணன் என் சீடன், கண்ணன் என் சற்குரு, கண்ணன் விளையாட்டுப் பிள்ளை, கண்ணன் என் காந்தன், கண்ணன் ஆண்டான் என்று தலா ஒரு பாடலும், கண்ணன் என் காதலன் என்ற தலைப்பில் 5 பாடல்களும், கண்ணம்மா என் காதலி என்ற தலைப்பில் 6 பாடல்களும், கண்ணம்மா என் குழந்தை, கண்ணம்மா என் குலதெய்வம் என்ற தலைப்புகளில் தலா ஒரு பாடலும் என மொத்தம் 23 பாடல்களைப் பாடியுள்ளார் பாரதி. கண்ணனைப் பல்வேறு ரூபங்களில் கண்டதோடு கண்ணனைப் பெண்ணாகவும் பாவித்துக் கவிதைகளைப் படைத்துளளார் பாரதியார்.

கண்ணன் பாட்டு என்பது பாரதியின் வாழ்க்கைத் தரிசனம். வாழ்க்கை தான் கண்ணன் என்றால் அதில் ஒன்றிப் பயின்று ஓரும் உயிருணர்வு பாரதி. பாரதி தன்னை விஞ்சிப் படைத்த படைப்பு என்று அதைச் சொல்ல வேண்டும்

“தன்னை நெடுநாள்களாக மறந்திருந்த பாரதநாடு திடீரென விழித்துக் கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி, கீதாசாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது. பத்து வருஷங்களுக்கு முன்பு அவர் பதிப்பித்த ஜன்ம பூமியிலேயே ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம் என்று இரண்டு செய்யுள்கள் காணப்படுகின்றன. ஆனால் பிற்பட்டுத்தான் கண்ணனுடைய செயல்களும் திருவிளையாடல்களும் அவர் மனத்தைப் பூரணமாக ஆகருஷித்தன. இவ் ஆகருஷணத்திற்கு நாலாயிரப் பிரபந்தத்துள் பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங்களின் அனுஸந்தானம் முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது. இக்கண்ணன் பாட்டானது ‘பா’ விஷயத்தில் அப்பாசுரங்களின் வழியையே தழுவியிருக்கிறது” கண்ணன் பாட்டு நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் கண்ணன் பாட்டினைப் பாரதியார் படைத்தமைக்குக் காரணம் என்ன என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றார் (Venkatasen, 1919).

## பாவனை வழிபாடு

இறைவனை பாவனை மூலம் வழிபடுவது இந்து மதத்தில் உண்டு. சைவத்திலும் வைணவத்திலும் இத்தன்மை காணப்படுகின்றது. தன்னை நாயகனாகவும் இறைவனை நாயகியாகவும் பாவனை செய்து வழிபடும் அகப்பொருள் மரபு தமிழில் உண்டு. நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் இந்த விஷயத்தில் வைணவத்தில் வழிபடுவது உண்டு. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக எண்ணி தாலாட்டுப் பாடிப் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களுக்கு ஏற்பப் பாடியுள்ளதையும் நாம் காணலாம். ஆண்டாளும் கண்ணனை ஆயர்குல நாயகனாகப் பாவித்து உருகி உருகிப் பாடியுள்ளதையும் அறிகின்றோம்.

“காவித்துணி வேண்டா கற்றைச் சடை வேண்டா

பாவித்தல் போதும் பரமநிலை யெய்துதற்கே"

என்று கூறும் பாரதி பாவனை ஒன்றினாலே பரமனை அடையலாம் என்கின்றார் (Venkatasen, 1919). மகாகவி பாரதியாரும் இம்மரபைப் பின்பற்றிக் கண்ணன் பாடல்களை அமைத்துள்ளதைக் காணலாம். மகாகவி பாரதியாரின் இக்கண்ணன் பாடல்கள் கண்ணனைத் தோழன், காதலன், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, காந்தன், ஆண்டான் என்று பல ஆண்ரூபங்களிலும், தாய், காதலி என்று பெண் ரூபங்களிலும் அணுகியுள்ளார். இவ்வாறு அவர் கண்ணனைக் காணும் பார்வையானது ஆழ்வார்களின் மொழியைப் பின்பற்றி அமைந்துள்ளதைக் காணலாம்.

## கண்ணன் பாடல்களின்வழி வெளிப்படும் அறங்கள்

திருமாலின் பத்து அவதாரங்களுள் பாரதியாரை மிகவும் கவர்ந்தது கண்ணன் எனும் அவதாரமே. பாரதியாருக்கு மட்டுமன்றி பக்தி மார்க்கமுடைய வைணவ அடியார்கள் அனைவருக்குமே பிடித்த ஓர் அவதாரமாகக் கண்ணன் அவதாரம் விளங்குகின்றது. இவ்வவதாரம் கண்ணன் குழந்தையாகப் பிறந்தது முதல் கொண்டு சாதாரண மனிதர்களோடு நெருங்கிப் பழகும், பேசும் பண்புகளைக் கொண்டதாக விளங்குகிறது. சாதாரண மனிதனைப் போலவே அவர் வளர்ந்ததும் ஆண்டதும் மடிந்ததும் அமைவது மட்டுமன்றி அக்காலங்களில் அவர் செய்த லீலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் அவன் படும் இன்ப துன்பங்களுக்கு ஏதோ ஒரு செய்தியைச் சொல்வனவாக அமைகின்றன. இத்தத்துவத்தை நன்கு புரிந்துகொண்ட பாரதியார் கண்ணனைச் சிக்கென்று பிடித்துக்கொண்டு அவனைப் பல ரூபங்களாகக் கண்டு அவ்வந்த ரூபங்களின்வழி அறத்தை வலியுறுத்திச் செல்வதைக் காணலாம்.

"கண்ணன் அடிமை இவன் எனுங் கீர்த்தியில்

காதலுற்று இங்கு வந்தேன்"

என்பதன்வழிக் கண்ணனுக்குத் தான் அடிமையாக இருப்பதை விரும்பி ஏற்கிறார் பாரதியார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. கண்ணனைப் பல ஆண் ரூபங்களாகவும், கண்ணம்மா என்ற பெண் ரூபமாகவும் காணும் பாரதியார் இவற்றின்வழி அவரவருக்கான அறங்கள் என்னென்ன என்பதைச் சுட்டிச் செல்வதைக் காணலாம் (Padmadevan Kavignar, 2020).

## தோழனுக்குரிய அறங்கள்

தோழன் என்பவன் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் நட்பு எனும் அதிகாரத்தில் விவரிவாக விளக்கியுள்ளார். பாரதியார் கண்ணனைத் தோழனாகக் கொண்டு தோழனுக்குரிய இலக்கணத்தை, அறத்தை வலியுறுத்துவதைக் காணலாம்.

"பெரும்

ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்று

அதனை விலக்கிடுவான் - சுடர்த்

தீபத்திலே விழும் பூச்சிகள் போல்வரும்

தீமைகள் கொன்றிடுவான்"

என்ற வரிகளில் ஆபத்தில் வந்து தோழன் என்பவன் உதவ வேண்டும் என்பதைக் காண முடிகின்றது. "கண்ணனின் புராண, இதிகாசத் தென்மைக்கு உட்பட்டுத் தோழனாகச் சித்தரிக்கிறார் பாரதியார் (Padmadevan Kavignar, 2020). நெருக்கடி மிகுந்த காலங்களில் ஆலோசனைகள் தந்து சோர்வைப் போக்கி உற்சாகப்படுத்தி வெற்றியை நோக்கி நகர்த்துவது தோழனின் பண்பு. அவ்வடிப்படையில் மைத்துனனான அர்ச்சுனனுக்குத் தோழனாகக் கண்ணன் விளங்கிய தன்மையை அடிப்படையாகக் கொண்டு 'கண்ணன் என் தோழன்' கவிதையைப் படைத்துள்ளார்" (Venkatasen, 2013).

## தாய்க்குரிய அறங்கள்

கண்ணன் ஆண்பாலாக இருந்தாலும் பால் மாறித் தாயாக இருப்பதாகப் பாரதியார் பாடுகின்றார்.

“கண்ணனெனும் பெயருடையாள் - என்னைக்

கட்டி நிறைவான் எனும் தன் கையிலணைத்து

மண்ணெனும் தன் மடியில் வைத்தே - பல

மாயமுறும் கதைசொல்லி மனங்களிப்பாள்

என் பருவம் என்றன் விருப்பம் - எனும்

இவற்றினுக் கிணங்க என் உளமறிந்தே

அன்பொடவள் சொல்லி வருவாள் - அதில்

அற்புத முண்டாய்ப் பரவச மடைவேன்”

என்று தாய்க்குரிய அறங்கள் இப்பாடலில் பாரதியாரால் சுட்டிக்காட்டப்படுகின்றன (Padmadevan Kavignar, 2020).

## தந்தைக்குரிய அறங்கள்

கண்ணன் தந்தையாக அமையும் தன்மையையும் பாரதியார் பாடியுள்ளார்.

“சாமி யிவற்றினுக் கெல்லாம் - எங்கள்

தந்தையவன் சரிதைகள் சிறிதுரைப்பேன்

வயது முதிர்ந்து விடினும் - எந்தை

வாலிபக் களையென்று மாறுவதில்லை

துயரில்லை மூப்புமில்லை - என்றும்

சோர்வில்லை நோயொன்று தொடுவதில்லை”

ஏழைகளைத் தோழமை கொள்ளும் கண்ணன் என் தந்தையாக இருந்து அன்பினைக் கைக்கொண்டு என்னை வழிநடத்துவான் என்பதன்வழி தந்தைக்குரிய அறங்களைப் பதிவு செய்வதைக் காண முடிகிறது (Padmadevan Kavignar, 2020).

## சேவகனுக்குரிய அறங்கள்

“கண்ணனைப் பாரதியார் சேவகனாகவும் காண்கின்றார்.

கண்ணை யிமையிரண்டும் காப்பதுபோல் என்குடும்பம்

வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்

மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்

ஒக்கநயங் காட்டுகீறான் ஒன்றுங் குறைவின்றிப்

பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்

பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து

நண்பனாய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,

பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்

கண்ணனை நான்ஆட் கொண்டேன் கண்கொண்டேன் கண்கொண்டேன்

கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமு முள்ளனவே"

என்ற வரிகளில் கண்ணன் சேவகனாக மட்டுமன்றி வைத்தியனாகவும் நண்பனாகவும் மந்திரியாகவும் நல்ல ஆசிரியனாகவும் தெய்வமாகவும் இருந்து எம்மைக் காப்பதாகக் கூறுகின்றார் பாரதியார். சேவகன் என்பவன் இப்படியெல்லாம் இருந்து தன் முதலாளியைக் காக்க வேண்டும் என்ற அறத்தை இதன்வழி பாரதியார் வலியுறுத்துவதைக் காணலாம் (Padmadevan Kavignar, 2020).

## அரசனுக்குரிய அறங்கள்

பாரதியார் கண்ணனை அரசனாகவும் பாவனை செய்து பாடியுள்ளார்.

"வேரும் வேரடி மண்ணும் இலாமலே

வெந்து போகப் பகைமை பொசுக்குவான்

பாரும் வானமும் ஆயிரம் ஆண்டுகள்

பட்ட துன்பம் கணத்திடை மாற்றுவான்

சக்கரத்தை யெடுப்ப தொருகணம்

தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்

இக்க ணத்தி லிடைக்கண மொன்றுண்டோ?

இதனுள் ளேபகை மாய்த்திட வல்லன்காண்"

அரசன் என்பவன் மக்களுக்கு எந்தத் துன்பமும் நேராமல் காக்க வேண்டும் என்பதையும் துன்பத்தை இன்பமாக மாற்ற வேண்டும் என்பதையும் தருமத்தைப் பாரில் தழைக்கச் செய்ய வேண்டும் எனவும் கூறுவதிலிருந்து அரசனுக்குரிய அறங்கள் வலியுறுத்தப்படுகின்றன (Padmadevan Kavignar, 2020).

## சீடனுக்குரிய அறங்கள்

கண்ணனைச் சீடனாகப் பாரதியார் பாவனை செய்து பாடியுள்ளார். குருவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்தால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம். ஆனால் கண்ணனோ குருவின் சொல்லுக்கு எதிராக நடப்பவனவாகப் படைத்திருக்கிறார் பாரதியார்.

"இன்னது செய்திடேல் இவரோடு பழகேல்

இவ்வகை மொழிந்திடேல் இனையன விரும்பேல்

இன்னது கற்றிடேல் இன்னவை கற்பாய்

இன்னவர் உறவுகொள் இன்னவை விரும்புவாய்

எனப்பல தருமம் எடுத்தெடுத் தோதி

ஓய்விலாது அவனோடு உயிர்விட லானேன்

கதையிலே கணவன் சொல்லினுக்கு எல்லாம்

எதிர்செயும் மனைவிபோல் இவனும் நான் காட்டும்

நெறியினுக் கெல்லாம் நேரெதிர் நெறியே

நடப்பா னாயினான்"

என்று கணவனுக்கு எதிராகவே மனைவி நடப்பாள் என்ற பெண்ணின் இயல்பைக் கூறி அவ்வாறே கண்ணனும் குருவுக்கு எதிராக நடப்பவனாக இருக்கின்றான் என்று வருந்தும் பாரதி கண்ணனாகிய சீடனை நேர்நிறுத்த அறிவுறுத்துகின்றான். இதிலிருந்து சீடன் என்பவன் குருவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவனாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை, சிறந்த அறத்தைக் கூறுகின்றார் பாரதியார் (Padmadevan Kavignar, 2020).

## சற்குருவின் அறங்கள்

சற்குரு என்றால் படிக்காத குரு என்று பொருள். தன் உள்ளுணர்வு மூலம் உணர்ந்து நடப்பவரே சற்குரு ஆவார். பாரதியார் கண்ணனை எனது சற்குரு என்று ஏற்று

"சோதி யறிவில் விளங்கவும் - உயர்

சூழ்ச்சி மதியில் விளங்கவும் - அற

நீதி முறைவழு வாமலே எந்த

நேரமும் பூமித் தொழில் செய்து - கலை

ஓதிப் பொருளியல் கண்டுதாம் - பிறர்

உற்றிடுந் தொல்லைகள் மாற்றியே - இன்ப

மோதி விழிக்கும் விழியினார்"

என்று பாடும் வரிகள் சற்குரு என்பவர் தம்மை எவ்வாறெல்லாம் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதோடு பிறரை எப்படியெல்லாம் வழிநடத்த வேண்டும் என்பதையும் அறம் நீதி முறையிலிருந்து வழுவாமல் தன்னையும் காத்துக்கொள்ள வேண்டும் பிறரையும் காக்க வேண்டும் என்கிறார் பாரதியார் (Padmadevan Kavignar, 2020).

## தாய்க்கான அறங்கள்

பாரதியார் கண்ணனைத் தாயாக பாவனை செய்து கண்ணன் என் தாய் என்ற கவிதை படைத்துள்ளார்.

"கண்ணனெனும் பெயருடையாள் என்னை

கட்டிநிறை வான் எனுந்தன் கையிலணைத்து

மண்ணெனுந்தன் மடியில் வைத்தே பல

மாயமுறுங் கதைசொல்லி மனங் களிப்பாள்

என்று தாய்க்கான அறங்கள் எவையெவை என்பதை விவரிக்கின்றார். வேண்டியதைக் கொடுத்திட விரைந்து செல்பவளாகவும் அருள் புரிபவளாகவும் நீண்ட புகழையும் நிகரற்ற பெருமையையும் கொடுப்பவளாகத் தாய் இருக்க வேண்டும் என்கின்றார்" (Padmadevan Kavignar, 2020). இவ்வாறு பாரதியார் கண்ணனைத் தோழனாகவும் தந்தையாகவும் சேவகனாகவும் அரசனாகவும் சீடனாகவும் சற்குருவாகவும் தாயாகவும் ஏற்று பாவனைவழி அவரவருக்கான அறங்களை வலியுறுத்திச் செல்வதைக் காண முடிகிறது.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் வரிசையில் குறிப்பிட்டுச் சுட்டத்தக்கது அற இலக்கியங்கள் என்பதை அவ்விலக்கியங்கள் வலியுறுத்தும் அறங்களின்வழி அறிந்துகொள்ள முடிகின்றது. காலந்தோறும் தமிழ்

இலக்கியங்கள் அறத்தைப் பரவலாக்கம் செய்துள்ளன என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பொருண்மைகளின் மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. கல்வி சிறந்த அறமாகக் கிறிஸ்தவர்களின் வருகைக்குப் பின் ஏற்றுக்கொள்ளப்பட்டதையும் உணரப்பட்டதையும் மேனாட்டார் இலக்கியப் பணிகள்வழி அறிந்துகொள்ள முடிந்தது. தீர்க்கதரிசியான மகாகவி பாரதியாரும் அறம் பாடியுள்ளதை அவரின் பல படைப்புகளின்வழி விளங்கிக்கொள்ள முடிகின்றது. பல்வேறு பக்திப் பாடல்களைப் பாரதி பாடியிருந்தாலும் இந்து மதத் தெய்வங்களைப் பற்றிய பாடல்களே மிகுதி என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இந்துமதப் பாடல்களுள் கண்ணன் பாடல்களே மிகுதி என்பதையே இவ்வாய்வு விளங்க வைக்கிறது. இறைவனை நாயகியாகவும் தன்னை நாயகனாகவும் பாவித்து வணங்குவது என்பது பக்தியில் அகப்பொருள் மரபு சார்ந்தது. இம்மரபையும் பாரதி பின்பற்றத் தவறவில்லை. பல்வேறு புதுமைகளைப் படைத்த பாரதி மரபையும் தழுவிச் சென்றதைக் கண்ணன் பாட்டு நமக்கு உணர்த்துகின்றது. இம்மரபுத்தழுவல் பெரியாழ்வாரை நினைவுபடுத்துகின்றது. பரம்பொருளாகிய இறைவனைப் பல்வேறு நிலைகளில் காணக்கூடிய ஒரு தன்மை பக்தியைப் பொருத்தவரை உள்ளது. பாரதியாரும் இதனைப் பின்பற்றிக் கண்ணனைப் பல ரூபங்களில் கண்டு மகிழ்வதோடு தன் கவிகள்வழி உரிமையுடன் பழகுகின்றார். பாரதியார் கண்ணனைத் தோழனாக, தந்தையாக, அரசனாக, சேவகனாக, சீடனாக, சற்குருவாக, தாயாகச் செய்யும் பாவனை வழி அவரவருக்கான அறங்களை வலியுறுத்திச் செல்வதைக் காண முடிகிறது. கடவுள் என்று ஒருவர் நமக்கு மேலே இருக்கின்றார் என்ற உணர்வு இருந்தாலே அறத்தை நிலைநிறுத்தி தேவையற்ற சிந்தனைகளை நீக்கி வாழ இயலும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரைவழி விளங்கிக் கொள்ள முடிகின்றது. பாரதியாரின் பிற படைப்புகளைவிட குறிப்பாக தெய்வ பக்திப் பாடல்களைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க வகையில் கண்ணன் பாட்டு வேறுபடுவதைப் பாரதியை முற்றும் அறிந்த ஆய்வாளர்களால் உணர்ந்து கொள்ள இயலும்.

## References


Balasubramanian, K.V. (2010) Purananuru, New Century Book House, Chennai, India.

Kathiraivellai, N. (2003) Tamil Mozhi Agarathi, Saradhi Pathippagam, Chennai, India.

Padmadevan Kavignar, (2020) Bharathiar Kavithaikal, Karpagam Puthagalayam, Chennai, India.

Pannirugaivadivelan, R. (2007) Aaivusudar, Meiyappan Pathippagam, Chennai, India.

Parimelagar, (2017) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Singaravelu Mudaliar, A. (2004) Abithana Chintamani, Seethai Pathippagam, Chennai, India.

Venkatasen, N. (2020) Bharathiar Kavithaikal, Karpagam Puthagalayam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License